FWC

# யாழ். வலயக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
# தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
# Field Work Centre
# தவணைப் பரீட்சை, நவம்பர் - 2015
# Term Examination, November - 2015

| தரம் :- 13 (2016) | நாடகமும் அரங்கியலும் - I | மூன்று மணித்தியாலங்கள் |
|---|---|---|

## பகுதி - I

- ❖ **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**
- ❖ **சரியான விடையின் இலக்கத்தைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.**

01) “அரங்கு” என்ற பதத்திற்குள் உள்ளக்கப்படுவது
(1) நாடகம்
(2) நாடகமும் அது நிகழ்த்தப்படும் இடமும்
(3) ஆற்றுகை நிகழும் இடம்
(4) நாடகத்தின் வடிவம்
(5) மேடை (.......)

02) சமஸ்கிருத அரங்கில் நாடகம் என்ற பதத்தைக் குறிக்கும் சொற்கள்
(1) நாட்டியம், நிருத்தியம் (2) நிருத்தியம், ரூபகம்
(3) நிருத்தம், நாட்டியம் (4) நிருத்தம், நிருத்தியம்
(5) நாட்டியம், ரூபகம் (.......)

03) இருவகையான நாடக மோடிகளைக் கூறும் தொன்மையான நூல்
(1) கவிதையியல் (2) நாட்டிய சாஸ்திரம் (3) தசரூபகம்
(4) அபிநவ பாரதி (5) மேகதூதம் (.......)

04) நாடகத்தின் தோற்றத்தினை கண்டு கொள்வதற்கு உதவும் தொன்மையான நகரம் எது?
(1) அற்றிக்கா (2) ஏதன்ஸ் (3) பீஜிங்
(4) லண்டன் (5) வெனிஸ் (.......)

05) நாடகத்திற்கு அவசியமான இருவகையான கதைப்பின்னல் பற்றியும் விளக்கும் நூல் எது?
(1) கவிதையியல் (2) நாட்டிய சாஸ்திரம் (3) தசரூபகம்
(4) அபிநவ பாரதி (5) அபிமாரகம் (.......)

06) நாடகக் கலையில் சித்திரிக்கப்படுவது யாது?
(1) குடும்பத்தில் நிகழும் பிரச்சினைகள்
(2) தனிமனித வாழ்வில் ஏற்படும் பிரச்சினைகள்
(3) வாழ்வின் மோதுகை நிலை
(4) பண்பாடு சார்ந்த பிரச்சினைகள்
(5) வர்க்க வேறுபாட்டினால் ஏற்படும் பிரச்சினைகள் (.......)

07) நாடக நடிகனுக்கு அவசியம் இல்லாத பண்பு எது?
(1) அவதானிக்கும் திறன்
(2) கருத்தூன்றும் திறன்
(3) மோடி பற்றிய அறிவு
(4) அரங்க மூலகங்களை பயன்பாட்டினை தீர்மானிக்கும் திறன்
(5) அரங்க வெளிகள் பற்றிய அறிவு (.......)

08) நடிப்பு என்ற பதத்துடன் தொடர்புபடாதது எது?
(1) இணைப்பாக்கம் செய்தல் (2) வகிபாகம் செய்தல்
(3) நடபங்கேற்றல் (4) ஆள் மேற்கொள்ளல்
(5) அபிநயச் சித்தரிப்பு (.......)

09) நடிகனின் கற்பனை ஆற்றல் அதிகளவு பயன்படுவது
(1) ஊமத்தில் (2) யதார்த்த நடிப்பில் (3) ஓராள் அரங்கில்
(4) புதிதளித்தலில் (5) கூட்மேத்தில் (.......)

10) தொன்மையான நாடக பாடத்தினை ஆக்கியவர் யார்?
(1) ஈஸ்கலஸ் (2) சோபோகிளிஸ் (3) யூரிப்பிடிஸ்
(4) அரிஸ்ரோபென்ஸ் (5) மெனான்டர் (.......)

11) நாடகத்தில் ஏற்படும் மோதுகையினால் உருவாகுவது யாது?
(1) கரு (2) கதைப்பின்னல் (3) சிக்கல்நிலை
(4) சிக்கல் அவிழ்ப்பு (5) கட்டமைப்பு (.......)

12) கிரேக்க திறஜடி நாடகத்தில் அவல நாயகன் பெருவீழ்ச்சி அடைவதற்கு காரணமாக அமைவது யாது?
(1) காமாசியா (2) மிமெசிஸ் (3) ஸ்ரசிமா
(4) பரடொஸ் (5) கதாசிஸ் (.......)

13) சமஸ்கிருத நாடகத்தில் வரும் கதாநாயகர்களின் வகைகள் எத்தனை?
(1) இரண்டு (2) மூன்று (3) நான்கு
(4) ஐந்து (5) ஆறு (.......)

14) கலை என்பது குறிப்பது யாது?
(1) வாழ்வின் அழகியல் அனுபவம்
(2) சமூகப் பிரச்சினை
(3) கலைஞனின் கற்பனை வெளிப்பாடு
(4) கலைஞனின் சமூக அனுபவம்
(5) ரசனையை ஊக்குவிப்பது (.......)

15) நாடகத்தினை திருஷ்ய காவியம் என்று கூறும் அரங்கு எது?
(1) கிரேக்க அரங்கு (2) சமஸ்கிருத அரங்கு (3) தமிழரங்கு
(4) சீன அரங்கு (5) சிங்கள அரங்கு (.......)

16) பின்வரும் மோடிகளுள் லோகதர்மி சுட்டி நிற்பது எது?
(1) யதார்த்தவாத அரங்கு (2) காவிய அரங்கு (3) அபத்த அரங்கு
(4) கற்பித அரங்கு (5) மிகைப்பாட்டு அரங்கு (.......)

17) சடங்கில் இருந்து நாடகம் தோற்றம் பெற்றது என்று கூறியவர் யார்?
(1) ஜேம்ஸ் தொம்சன் (2) ஜோர்ச் தொம்சன் (3) பேனாட்ஷா
(4) எமிலிசோமா (5) அரிஸ்ரோட்டில் (.......)

18) கிரேக்க அவலச் சுவை நாடகம் தோற்றம் பெறுவதற்கு உதவிய அம்சம் யாது?
(1) கோமஸ் ஊர்வலம் (2) லெனேவிழா (3) இசைப்பாமுகாரி
(4) கோயிற் பாடல் (5) டித்திராம் பாடல் (.......)

19) உரோம நாடக மரபுக்கு உதவிய அரங்கு எது?

(1) கிரேக்க அரங்கு
(2) மத்தியகால அரங்கு
(3) எலிசபெத்கால அரங்கு
(4) அமெரிக்க அரங்க மரபு
(5) பிரான்சிய அரங்க மரபு (.......)

20) சமஸ்கிருத நாடகங்களில் 5 - 10 க்கும் இடையிலான அங்கங்களைக் கொண்ட நாடக வகைகள் எவை?

(1) நாடக, பிரகசணம்
(2) நாடக, பிரகரணம்
(3) பிரகரணம், பிரகசணம்
(4) ஸமவகார, நாடக
(5) ஸமவகார, பிரகரணம் (.......)

21) நாடகம் ஒன்றினை மேம்படுத்துவதற்கு உதவுவது எது?

(1) ஆற்றுகை
(2) கலந்துரையாடல்
(3) கலைஞர்களின் கருத்துக்களைக் கேட்டல்
(4) விமர்சனம்
(5) நாடகத்தை ஒளிப்பதிவு செய்து மீண்டும் பார்வையிடல் (.......)

22) நாடகம் ஒன்றை உருவாக்குவது தொடர்பான முதலாவது தீர்மானத்தை மேற்கொள்பவர் யார்?

(1) நெறியாளர்
(2) நாடக ஆசிரியர்
(3) தலைமை நடிகன்
(3) தயாரிப்பாளர்
(5) மேடைமுகாமையாளர் (.......)

23) மோடிமைப் பாணியின் பிரதான நோக்கமாக அமைவது யாது?

(1) வாழ்வைப் பாவனை செய்தல்
(2) பார்வையாளரின் கற்பனைக்கு இடமளித்தல்
(3) பார்வையாளரைச் சிந்திக்கத் தூண்டுதல்
(4) வாழ்வுசார் நமபகத் தன்மை ஏற்படுத்தல்
(5) சமகால பிரச்சினைகளை வெளிப்படுத்தல் (.......)

24) பிரதானமான நெறியாளர்களுள் நடிப்புப் பற்றிய கொள்கைகளை முதலில் முன்வைத்தவர் யார்?

(1) ஸ்ரெனிஸ் லெவஸ்கீ
(2) மேயர்கோல்ட்
(3) குறட்டஸ்கீ
(4) பேட்டோல் பிறெக்ற்
(5) அன்ரனி ஆர்த்தோ (.......)

25) இலக்குப் பார்வையாளர் என்ற பதம் குறிப்பது

(1) நாடகம் ஆற்றுகை செய்யப்படுவதற்கு முன் பரீட்சார்த்தமாக அழைக்கப்படுபவர்களை
(2) அனைத்து தரப்பு பார்வையாளர்களை
(3) நாடக வகைக்குரிய பார்வையாளர்களை
(4) பண்பாடு சார்ந்த பார்வையாளர்களை
(5) விமர்சகர்களை (.......)

26) நினைவூட்டுனர் பயன்படுத்தப்படாத நாடக வகை

(1) ஊமம்
(2) அவலச்சுவை நாடகம்
(3) கர்விய அரங்கு
(4) மகிழ்நெறி நாடகம்
(5) யதார்த்தவாத அரங்கு (.......)

27) உலகின் தொன்மையான மோடிகள் எவை?

(1) அவலச்சுவை, மகிழ்நெறி
(2) வடமோடி, தென்மோடி
(3) நாட்டிய தர்மி, லோகதர்மி
(4) நாடக வழக்கு, உலகியல் வழக்கு
(5) நிருத்தியம், நாட்டியம் (.......)

28) வார்ச்சீக அபிநயம் பயன்படுத்தப்படாதது

(1) நிருத்தம்
(2) நிருத்தியம்
(3) பிரகரணம்
(4) பிரகசணம்
(5) ஈகாமிருகம் (.......)

29) சாத்வீக அபிநயம் முதன்மை பெறாத அரங்கு எது?

(1) கிரேக்க அரங்கு
(2) சமஸ்கிருத அரங்கு
(3) எலிசபெத் கால அரங்கு
(4) யதார்த்த அரங்கு
(5) காவிய அரங்கு (.......)

30) நாடகங்களின் ஆற்றுகையினை இலகுவாக மேற்கொள்வதற்கு நிர்வாக ரீதியாக காரணமாக அமைபவர் யார்?

(1) நெறியாளர்
(2) நடிகர்
(3) மேடை முகாமையாளர்
(4) நினைவூட்டுனர்
(5) தயாரிப்பாளர் (.......)

31) அனுபாவத்தில் வெளிப்படும் பாவங்களின் எண்ணிக்கை

(1) ஆறு (2) ஏழு (3) எட்டு (4) ஒன்பது (5) பத்து (.......)

32) மகா நாடகம் என்ற நாடக வகை எவ் அரங்கில் காணப்படுகின்றது?

(1) சமஸ்கிருத அரங்கில்
(2) நாட்டுக்கூத்தில்
(3) கதகளி அரங்கில்
(4) சோழர்கால அரங்கில்
(5) யட்சகானா அரங்கில் (.......)

33) கதை ஒன்றினை பாத்திரங்கள் மூலம் சித்திரிக்கப்படுவது எது?

(1) நாவல்
(2) சிறுகதை
(3) நாடகம்
(4) பாடல்
(5) அபிநயங்கள் (.......)

34) மேடைமுகாமையாளரால் மேற்கொள்ளப்படாத பணி யாது?

(1) நடிகர்களின் அசைவுகளை தீர்மானிப்பது
(2) ஒத்திகைகளை ஒழுங்கமைப்பது
(3) ஆற்றுகையினை நிகழ்த்துவதற்கு துணை புரிவது
(4) நினைவூட்டுனர்களுக்கு பயிற்சி வழங்குவது
(5) ஆற்றுகைக்குப் பின் நாடகப் பொருட்களைக் களஞ்சியப்படுத்துவது (.......)

35) நடிகனின் பணியாக அமையாதது யாது?

(1) பாத்திரச் சித்தரிப்பு
(2) நெறியாளர் கூறியவாறு தொழிற்படுதல்
(3) ஆற்றுகையின் பின்னர் பார்வையாளரின் கருத்துக்களைக் கேட்டறிதல்
(4) அரங்க மூலகங்களின் பயன்பாட்டினை உறுதி செய்தல்
(5) ஏனைய நடிகர்களின் நடிப்பிற்கு துணை செய்தல் (.......)

36) குறித்த வேடமுகம் பயன்படுத்தும் அரங்கு எது?



(1) கபூக்கி
(2) கியோயின்
(3) புண்நாக்கு
(4) நோ
(5) கொலாக்கா (.......)

37) பின்வரும் படத்தில் குறிப்பிடப்படும் யதார்த்த விரோத அரங்கின் கலைஞர் யார்?



(1) மேயர் கோல்ட்
(2) பேட்டோல் பிறெக்ட்
(3) சாமூவேல் பெக்கட்
(4) பீற்றர் புறுாக்
(5) றிச்சட் செக்னர் (.......)

38) அண்மையில் காலமான சிங்கள நாடகக் கலைஞர் யார்?



(1) எதிர்வீரசரச்சந்திரா
(2) குணசேன கலப்பதி
(3) சோமலதா சுபசிஸ்ஹ
(4) தயானந்த குணவர்த்தன
(5) ஹென்றிஜெயசேன (.......)

39) பின்வரும் படத்தில் காணப்படும் புகழ் பெற்ற நாடக ஆசிரியர், நெறியாளர் யார்?



(1) குழந்தை ம. சண்முகலிங்கம்
(2) முருகையன்
(3) தாஸீஸியஸ்
(4) சி. மௌனகுரு
(5) நா. சுந்தரலிங்கம் (.......)

40) பின்வரும் குழுவினர் நாடகத்தில் நிகழ்த்தப்படும் பங்களிப்பு யாது?



(1) காட்சி மாற்றத்தின் போது பாடலைப் பாடுதல்
(2) பாத்திரத்தைச் சித்தரித்தல்
(3) வேடமுகங்களைப் பயன்படுத்தி பயமுறுத்தும் காட்சிகளில் ஈடுபடுதல்
(4) நாடகத்தின் உணர்ச்சியை கூட்டாக வலியுறுத்தும் வகையில் தொழிற்படுதல்
(5) முதியவர்களாக தோன்றி நாடகத்தின் கதை தொன்மைக் காலத்தில் நிகழ்வதனை வெளிப்படுத்தல் (.......)

## பகுதி - II

❖ **பகுதி II இல் பிரிவு A யிலிருந்து இரண்டு வினாக்களுக்கும் பிரிவு B யிலிருந்து இரண்டு வினாக்களுக்குமாக நான்கு வினாக்களுக்கு விடை எழுதுக.**

### பிரிவு - A

**01) "கலை என்பது அழகியல் நிகழ்வு ஆகும்"**

i) நுண்கலை என்றால் என்ன? *(2 புள்ளி)*

ii) நுண் கலைகளைத் தருக. *(4 புள்ளி)*

iii) நாடகத்தை ஏனைய கலைகளில் இருந்து வேறுபடுத்துக. *(9 புள்ளி)*

**02) "உலக நாடக வரலாற்றில் கிரேக்க அரங்கு பிரதானமான ஒரு அரங்காக திகழ்கிறது"**

i) கிரேக்க அரங்கின் சிறப்பியல்புகளைத் தருக. *(7 புள்ளி)*

ii) கிரேக்க அரங்கின் பண்புகள் இன்றைய அரங்குடன் தொடர்புபடும் பாங்கினை விளக்குக. *(8 புள்ளி)*

**03) "நாடக ஆற்றுகைக்கு அடிப்படையாக அரங்கும் அமைகிறது"**
**ஆற்றுகை நிகழ்த்தப்படும் முறமையை கீழ்வரும் அரங்குகளுடன் தொடர்புபடுத்தி விளக்குக.**

i) வட்ட அரங்கு *(5 புள்ளி)*

ii) தெருவெளி அரங்கு *(5 புள்ளி)*

iii) கிரேக்க அரங்கு *(5 புள்ளி)*

### பிரிவு - B

**04) "நடிப்பு என்பது பாத்திரச் சித்தரிப்பு ஆகும்"**

i) பாத்திரச் சித்தரிப்பிற்கு ஸ்ரெனிஸ் லெவஸ்கீ முன்வைத்த நுட்பங்கள் உதவும் ஆற்றை விளக்குக. *(7 புள்ளி)*

ii) உமது பிரதேசத்தின் சடங்குகளிலும் கூத்துக்களிலும் பாத்திரம் சித்தரிக்கப்படும் ஆற்றினை விளக்குக. *(8 புள்ளி)*

**05) "நாடகங்களில் அழகியல் வெளிப்பாடு முதன்மை பெறுகிறது"**

i) ரஸம் என்றால் என்ன? *(3 புள்ளி)*

ii) ரஸத்தின் வகைகளைத் தருக. *(4 புள்ளி)*

iii) ரஸ வெளிப்பாட்டில் ஸ்தாயி பாவம், விபாவம், அனுபாவம், வியபிச்சாரி பாவம் என்பன வழங்கும் பங்களிப்பைத் தருக. *(8 புள்ளி)*

**06) பின்வருவனவற்றில் மூன்றிற்கு சிறுகுறிப்பு எழுதுக.**

i) மேடைமுகாமையாளரின் பணி

ii) நாடக உருவாக்கத்தில் நெறியாளரின் பங்கு

iii) அபிநயங்கள்

iv) கதாசிஸ்

v) தொலைக்காட்சி நாடகம் (3 x 5 = 15 *புள்ளி)*